1993 மார்ச் 31]

திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்களின் வாழ்வு வளம் பெறுவதில் கண்ணும் கருத்துமாக நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு இருக்கிறது. குளங்களில் மீன் வளர்த்து மேம்பாடு செய்யும் வகையில் அரசு மீன் வளர்ப்பிற்கு மானியம் வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தைப் பொறுத்த மட்டிலே மீன் வளர்ப்பதற்கு ஏற்ற நீர் நிலைகள் அதிகமாக இருக்கின்றன. அதனைக் கருத்தில் கொண்டு தான் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீனை அதிகமான பேர்கள் வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக தனியார் ஒருவர் மீன் வளர்க்க விரும்பினால் ஹெக்டருக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் மானியம் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 200, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. கு. லாரன்ஸ் கேட்கலாம். மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

200—

தமிழ்நாட்டிலுள்ள கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

*9517—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவைகள் இலாபத்தில் நடைபெறுகின்றதா?

(இ) நட்டத்தில் நடந்தால் அதை இலாபகரமாக நடத்த அரசு என்ன திட்டங்களை வைத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 75 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) லாபத்தில் நடைபெறும் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 45. நட்டத்தில் நடைபெறும் கயிறு தொழில் கூட்டு

றவுச் சங்கங்கள் 24. செயலற்று இருக்கும் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 6.

(இ) நட்டத்தில் இயங்கி வருபவைகளை லாபத்தில் செயல் பட வைத்திட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய அரசு பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு தொழில் வணிகத் துறையின் மூலம் அவற்றுக்கு தீர்வு காண நடவடிக்கைகள் எடுத்து சில நிதி உதவிகளை செய்து வருகிறது.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கயிறு உற்பத்தி செய்கிற கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக பெண்களுக்கும், ஏழைகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்குவதுடன், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் பேருதவியாக இருக்கிறது. அத்துடன் சர்வதேச அளவில் இன்றைக்கு கயிறுக்கு அதிகமாக மார்க்கட் இருக்கிறது. எனவே, இந்த கூட்டுறவுச் சங்கங்களை நவீனப்படுத்தவும், தேவையான, லாபகரமாக ஓடுகிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய கட்டிடங்களைக் கட்டவும், அத்துடன் நிதி ஒதுக்கீடு தமிழகத்தில் அதிகமாக கொடுக்கப்பட்டால் மத்திய காயிர் போர்டு அதிகமாக மானியம் வழங்குவதற்கும் வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். எனவே இத்தகைய காரியங்களைச் செய்வதுடன் கன்னியாகுமாரி மாவட்டத்தில் தேங்காய் மட்டைகள் அதிகமாக இருப்பதால் இன்னும் அதிக கூட்டுறவுச் சங்கங்களை அங்கே உருவாக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் மத்திய கயிறு இணையம் அளிக்கக்கூடிய 50 சதவிகிதத் தொகையுடன், மாநில அரசும் 50 சதவிகிதம் தொகை அளித்து, கயிறு கூட்டுறவுச் சங்கங்களைச் செயல்பட வைக்க, தொடங்க அரசு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறது.

192—

பாலகிருஷ்ணாபுரத்தை பேராவூரணி ஒன்றியத்தோடு சேர்த்தல்

* 12746— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், பாலகிருஷ்ணாபுரத்தை பேராவூரணி ஒன்றியத்தோடு சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?